[28th November 1970

(இ) வேர்க்கடலையினின்று பெறப்பட்ட புரதமும் முழுப்பாலும் சேர்த்து ''லாக்டோன்'' என்கிற ஒரு வகைப் பால் 1969-ம் ஆண்டு ஆகஸ்டு திங்களில் சென்னை மாநகரில் சோதனை முறையில் வழங்கப் பட்டது. இது மைசூரிலுள்ள மத்திய உணவுத் தொழில் நுணுக்க ஆய்வுக் கழகத்தால் அறிமுகப்படுத்தப்பட்டது. மத்திய சிறைச்சாலைக் கைதிகளுக்கு ''லாக்டோன்'' வழங்கப்பட்டதுடன் அனைத்து நாடுகள் சுற்றுலாக் கண்காட்சியில் கால் லிட்டர் அளவுள்ள புட்டிகளில், நாள் தோறும் 60 முதல் 70 லிட்டர் வரை சுவையூட்டப்பெற்ற லாக்டோன் விற்கப்பட்டது. மாதவரம் ஊராட்சி ஒன்றியப் பள்ளியிலும் பாற் பண்ணையிலுள்ள பள்ளிகளிலும் இது வழங்கப்பட்டது.

திரு. ஜி. சுவாமிநாதன் : அதைத் தொடர்ந்து சென்னை மக்களுக்கு வழங்கும் உத்தேசம் இருக்கிறதா ?

மாண்புமிகு திரு. ஓ. பி. ராமன் : கிராக்கி போதிய அளவு இல்லாத காரணத்தால், அது இப்போது கைவிடப்பட்டுவிட்டது.

திரு. ஜி. சுவாமிநாதன் : மாதவரம் பால் பண்ணைக்கு யுனிசெஃப் (UNICEF) 11 கோடி ரூபாய் நிதி உதவி அளிப்பதாகப் பத்திரிகை யில் படித்தேன். அது சம்பந்தமாக நிலைமை எப்படியிருக்கிறது என்று அமைச்சர் அவர்கள் சொல்வார்களா ?

DEPUTY CHAIRMAN : Questions are over.

(NOTE :—An asterisk (*) at the commencement of a speech indicates revision by the Member.)

II. ANNOUNCEMENT *Re Message from the Assembly*

DEPUTY CHAIRMAN : A message has been received from the Hon. Speaker, Legislative Assembly, transmitting a copy of the Tamil Nadu Co-operative Societies (Amendment) Bill, 1970 (L.A. Bill No.27 of 1970), as passed by the Legislative Assembly, and signed by him for the recommendation of the Council and certifying that the Bill is a Money Bill within the meaning of Article 199 of the Constitution of India.

III. CORRECTIONS TO STATEMENT MADE BY HON. MINISTER FOR FOOD AND LOCAL ADMINISTRATION

THE HON. THIRU P. U. SHANMUGHAM : During discussions in this House yesterday in connection with the consideration of the Tamil Nadu District Municipalities (Amendment) Bill, the Hon. the Leader of the Opposition enquired whether the ceiling limits of Rs. 15/- and Rs. 30/- mentioned in the new clause 26-A referred to old assessment or new assessment.